# ★ தமிழகத்தில் தொடர்ந்தும் பெரும் வன்முறை

(சென்னை)
பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து தமிழகத்தின் பலபகுதிகளிலும் தொடர்ந்தும் பெருமளவில் வன்முறைச்சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றன.
நேற்று முன்தினமிரவு தென் (4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 09 இதழ் 227
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25 — 09 — 1992

## பொலிஸ் அதிகாரி கொலை புலிகள் மீது சந்தேகம்

(கொழும்பு)
கொழும்பு மோசடிப் புலன் விசாரணைப் பணியகத்தைச் சேர்ந்த பொலிஸ் சுப்பிரெண்டன் தியோப்பிலசை கொலை செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்குமூன்றுபேரைக்கொண்ட விசேட புலன்விசாரணைக்குழு ஒன்றை நகரக் குற்ற புலனு (4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை குறித்து பிரேமா-ராவ் பேசுவர்

(கொழும்பு)
சார்க் நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அடுத்த இரு வாரங்களில் இந் (4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்குராணுவ உதவியை பாக். தொடர்ந்து வழங்கும்

## பிரேமாவின் விஜயம் வெற்றி

(கராச்சி)
இலங்கைக்கான இராணுவ உதவிகளை, பாகிஸ்தான் தொடர்ந்தும் வழங்குமென இலங்கையிடம் பாகிஸ்தான் உறுதியளித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி இலங்கையின் உள்நாட்டு பிரச்னை குறித்தும் பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இலங்கைக்கான இராணுவ உதவிகளை முன்பு பல நாடுகள் நிறுத்தியிருந்த போது பாகிஸ்தான் தொடர்ந்தும் இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கியதை இவ்விஜயத்தில் இரு தரப்பும் (4ம் பக்கம் பார்க்க)

## எழுச்சி நாளை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபன் ஐந்தாம் ஆண்டு நினைவு நிறைவு தினமான எழுச்சிநாளை, நாளைபெரியளவில் கொண்டாடஏற்பாடு (4-ம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவாக தொடர்ந்து உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனுக்கு அஞ்சலி செய்யும் வகையில் நல்லூரில் நேற்றுக்காலை ஏழுமணியளவில் செல்லையா தருமசேனன் (4 ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் நேற்று கூச்சல் குழப்பம்

(கொழும்பு)
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தின் போது பெரும் கூச்சல் குழப்பமும், எதிர்க்கட்சி பிரதம கொறடா திரு றிச்சார்ட் (4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நடைபெறும் படுகொலைகளை ஐ. நா. சபை வெளி உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்

(லண்டன்)
இலங்கையில் தொடர்ந்தும் நடைபெறும் மிகமோசமான மனித உரிமை மீறல்களையும் படுகொலைகளையும் வெளி உலகுக்கு எடுத்துகாட்ட ஐ. நா. சபை தவறிவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை பொதுச் செயலர் திரு. இயன் மாட்டின் குற்றம் சாட்டியுள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை பிரச்னையில் ஐ. நா. தலையிடாது

### - பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னையில் ஐக்கிய நாடுகள்சபை தலையிடும் என தாம் எண்ணவில்லை யென பிரதமர் திரு டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்; இலங்கைக்கான உதவிகளை நிறுத்தக்கோரி பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு யாழ். பிரஜைகள்குழு மகஜர் அனுப்பியது பற்றி அரசுக்கு தெரியாது.
வடக்கு, கிழக்கு பிரச்னை (4-ம் பக்கம் பார்க்க

## மாகாணசபைத் தேர்தல் வடக்கு-கிழக்கில் நடைபெறாது

(கொழும்பு)
அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் வடக்கு-கிழக்கில் நடாத்த முடியாது என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
வடக்கு-கிழக்கில் பெருமளவு பகுதி சுமுகநிலைக்கு வராததாலும் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் குறிப்பிட்ட அளவு மக்களே இருப்பதாலும் தேர்தல் நடாத்துவது சாத்திய (4ம் பக்கம் பார்க்க)

## பாட்டாளி மக்கள் கட்சியை உடன் தடைசெய்யவேண்டும்

### - ஜெயலலிதா வலியுறுத்து -

(சென்னை)
பாட்டாளி மக்கள் கட்சியை உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறது.
நேற்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார்.
இது சம்பந்தமாக பிரதமருக்கு நேற்று கடிதம் எழுதியிருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.
பிரிவினை வாதத்தைப் பரப்புவதற்காகவும் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகவும் பட்டாளி (4ம் பக்கம் பார்க்க)

## நிரந்த இணைப்பிற்கு சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாண நிரந்தர இணைப்பு ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலமே நிர்ணயிக்கப்படுமென அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.
அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் (4-ம் பக்கம் பார்க்க)

## ஜாமீனில் விடுவிக்க நீதிபதி உத்தரவு

(சென்னை)
பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்கள் எஸ் ராமதாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன் மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த இரண்டு பேரையும் பிணையில் விடுமாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். ஜனார்த்தனன் உத்தரவு பிறப்பித் [4ம் பக்கம் பார்க்க]

## இராணுவ அதிகாரிகளுடன் 'ஹெல உறுமய' சந்திப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் பாதுகாப்பு குறித்து 'ஹெல உறுமய' முக்கிய பிரமுகர்கள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன உட்பட பல இராணுவ அதிகாரிகளை சந்தித்துப் பேசியுள்ளனர்.
கடந்த வாரம் வவுனியா வந்த 'ஹெல உறுமய' அமைப்பாளர் திரு திலக் கருணாரத்னவும், உ சித்தலைவர் எஸ். எல். குணசேகரா (4ம் பக்கம் பார்க்க)

நீர் பயிரை வளர்க்கும்
பயிர் உயிரை வளர்க்கும்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆங்கில றெமிங்ரன் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க 276, பருத்தித்துறை வீதி, நல்லூர் கோவில் முன் வீதி நல்லூர்
(சி-6833)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6690)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Olivetti Typewriter - Seiko, Citizen, ஆட்டோமரிக், Casio - Solar Rolex, Omega ஆகியனவும், இன்னும் பலவகைக் கடிகாரங்களும் Rs. 200/- முதல் விற்பனைக்குண்டு தங்கள் பழைய மணிக்கூடுகளுக்கும் பரிமாற்றம் செய்து கொள்ளலாம் டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல் பார் அருகில்) யாழ்ப்பாணம். (சி-6832

## பொதுக்கிணறு புனரமைப்பு

(உடுப்பிட்டி)

சரணவாய் அண்ணாசிலையடியில் அப்பகுதி மக்களின் குடிநீர் வசதி கருதி பொதுக் கிணறு ஒன்று புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 8 வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த இக்கிணறு புனரமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது. [150]

## ஆஸ்பத்திரியில் சிரமதானம்

(புலோலி)

தியாகதீபம் திலீபனின் நினைவாக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் புலோலி அ. மி த. க. பாடசாலை மாணவர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (61)

## இராசி பலன்

25-09-1992

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 09

சதுர்த்தசி மு இ. 7-?4 வரை பூரம். மு. இ. 7-31 வரை, இராகுகாலம் காலை 10-32 முதல் 2-02 வரை. சுப நேரம் 6-02 முதல் 7-32 வரை. சித்தயோகம்.

மேடம்:- கருத்து வேற்றுமை, அகால உணவு, விரக்தி

இடபம்: காரியச் சுணக்கம், மனவமைதி குன்றல், பயம்.

மிதுனம்: பணியாள் ஆதரவு இனசன வருகை குடும்ப மகிழ்ச்சி.

கடகம்: கடின வேலைப்பழு, வீண் வம்பு, விதண்டாவாதம்

சிங்கம்: தாய்மாமன் உதவி, தொழில் சிறப்பு, பணவரவு.

கன்னி: கோபதாபம், மனக் கசப்பு. வேண்டாத உறவு.

துலாம்: புதிய யுக்தி, தொழில் முதவீடு, பயண அனுபவம்.

விருச்சிகம்: மேலதிகாரிகள் நன்மை, காரிய சித்தி, பாராட்டு,

தனுசு: உடல் சோர்வு, மனக்குறை, குடும்பப் பிரிவு.

மகரம்; குழப்பமடைதல், கருத்து மோதல், ஏமாற்றப்படுதல்.

கும்பம்: தொழில் லாபம், விவாகப் பேச்சுக்கள், தான தர்மம்.

மீனம்; அதிகாரச் சிறப்பு, பெரியோர் சந்திப்பு, உறவினர் உதவி.

- ஜோஸ்யர்

## உடுகம்பொலவை பிடிக்க முடியவில்லை

(கொழும்பு)

"முடியுமானால் என்னைப் பிடித்துப் பாருங்கள் நான் இலங்கையிலேதான் இருக்கின்றேன்" என்று முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல அண்மையில் பத்திரிகைகள் மூலம் அரசுக்கு விடுத்த சவாலைத் தொடர்ந்து அவரை நாம் பல இடங்களில் இரகசியப் பொலிசார் மூலம் தேடினோம். ஆனால் அவர் இருக்கும் இடத்தை எம்மால் இதுவரை கண்டு பிடிக்கமுடியவில்லை.

இவ்வாறு கடந்தவாரம் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபயசேகரா முன்னிலையில் பிரதி பொலிஸ் மாஅதிபர் உடுகம்பொலவை கைதுசெய்வது சம்பந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கில் இரகசியப் பொலிசார் தெரிவித்தார்கள்.

நீதிபதி மேல் விசாரணையை நவம்பர் 2ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (வி)

## கொடி வாரம்

(கொழும்பு)

செஞ்சிலுவைச் சங்க கொடி வாரம் நாளை 26-ம் திகதியிலிருந்து அக்டோபர் 3-ம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இக்கொடி வாரத்தினை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (கே)

## யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோரின் விபரங்கள் பகிய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

1991 ஆண்டு யூன் மாதம் 11ம் திகதியிலிருந்து இவ்வாண்டுவரையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் காணாமல் போனவர்கள் பற்றிய முழுத்தகவல்களை பதிவதற்கான விண்ணப்ப படிவங்கள் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

காணாமற்போனவர்களின் விபரங்களை விண்ணப்பிப்பதற்கான ஒரு செயலக உத்தியோகத்தர் ஒருவரை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக நியமித்ததையடுத்து செயலகத் தனிப் பிரிவில் இது இயங்கிவருகிறது. (50)

## மானிப்பாய் முகாம்களில் பசிக் கொடுமையால் அகதிகள் தவிப்பு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் கட்டுடை பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு கடந்த பல நாட்களாக உணவுப் பொருட்கள் ஏதும் வழங்கப்படாததினால் தாம் பெரும் கஷ்டப்படுவதாகவும் பசிக் கொடுமையால் தவிப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் தமது சொந்த இடங்களை விட்டு இம்முகாம்களில் தாம் தங்கி இருப்பதாகவும் ஆரம்பத்தில் இருநாட்களாக ஒரு நேர சமைத்த உணவுகளை அரசசார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் வழங்கி வந்ததாகவும் அதன் பின்பு அரசாங்கம் ஒருகட்ட உலர்உணவு நிவாரணம் வழங்கியது. எனவும் அதன் பின்பு தமக்கு எந்த ஒரு நிறுவனங்களும் இதுவரை எந்தவித உணவுப் பொருட்களையும் வழங்கவில்லை என்றும் தெரிவித்தனர். (வி)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது, 19 வயதிற்கிடைப்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்.

யாழ் கோட்டம் 17 வயது பிரிவு - புனித யோசப் வ் எதிர் கொக்குவில் இந்து யாழ்.மத்திய கல்லூரி எதிர் நாவாந்துறை றோ. க. வி இப்போட்டிகள் யாழ். இந்துவில் நடைபெறும்.

பண்டத்தரிப்பு கோட்டம் 17 வயது பிரிவு இளவாலை சென் ஹென்றீஸ் எதிர் வட்டு இந்து, நடேஸ்வரா எதிர் சங்கானை சிவப்பிரகாசா இப்போட்டிகள் கொக்குவில் இந்துவில் நடைபெறும்.

மருதனமடம் கோட்டம் 17 வயது 'ஏ' பிரிவு ஊரெழு கணேசா எதிர் தமிழ் கந்தையா வி, அத்தியார் இந்து எதிர் அச்சுவேலி ம வி இப்போட்டிகள் உரும்பிராய் இந்துவில் நடைபெறும். (சி)

## சம்பள உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் ப. நோ. கூ. சங்கத்தில் வேலைசெய்யும் ஊழியர்கள் அனைவருக்கும் புதிய சம்பள உயர்வு வழங்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக இச்சங்கத்தின் உப தலைவர் திரு எஸ். ரி. கணநாதன் தெரிவித்தார்.

மேற்படி சங்கம் தற்போது துரிதவளர்ச்சி அடைந்துள்ளதால் இதில் வேலைசெய்யும் ஊழியர்கள் அனைவருக்கும் சம்பள உயர்வை வழங்குவதற்கும் ஊழியர்களின் தொகையை கூட்டுவதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார். (வி)


## சாவகச்சேரி நகரசபை

## முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி பொதுச் சந்தையில் மீன் வகைகள், மரக்கறி வகைகள், வெற்றிலை, பழ வகைகள், உணவுப் பண்டங்கள் முதலியவற்றை வெறும் நிலத்தில் வைத்து விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

இக்கட்டளையை மீறிச் செயற்படுவோரின் பொருள்கள் அகற்றப்பட்டு உடனுக்குடன் அழிக்கப்படும்.

எனவே, தயைகூர்ந்து இவ்விடயத்தில் சபையுடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
22-09-92.

(ஏ-2468)



## வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனைபதி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## சண்டிகாஹோமமும் அஷ்டோத்தர சங்காபிஷேக திவ்விய பெரும் யாகம்

அம்பிகை அடியார்களே!

ஈழ யாழ்ப்பாணத்தின் மேற்குப் பாகத்தே துறட்டிப்பனைப்பதியில் எழுந்தருளி அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கும் சர்வலோகநாயகி ஜகன்மாதா முத்துமாரியம்பாள் சந்நிதானத்தில் மக்கள் செழிப்புறவும், நாடு சுபீட்சம் பெறவும், எல்லாநலன்களும் கிடைக்க வேண்டியும் தேவி பாகவத்தில் கூறிய பிரகாரம் தேவி மகாத்மிக பாராயணமும் சண்டிகாஹோமயாகமும், அஷ்டோத்தர சங்காபிஷேக திருமஞ்சன விழாவும் நிகழும் ஆங்கிரச வருடம் புரட்டாதி மாதம் 11 ஆம் நாள் (27—09—1992) ஞாயிற்றுக்கிழமை நவராத்திரி புண்ணிய விரத ஆரம்ப தினத்தில் நடைபெறவுள்ளது.

### ☆ நிகழ்ச்சி நிரல் ★

26-09-92 சனிக்கிழமை.

மாலை 3 00 மணிக்கு விநாயகர் வழிபாடு, சாந்தி வழிபாடு, கணபதி ஹோமம் யாகபூஜை, நவாவரண பூஜை, சதுஷ்ஷஷ்டி உபசார பூஜை, தேவி மகாத்மிக பாராயணம் சர்வாஞ்சலி.

27-09-92 ஞாயிற்றுக்கிழமை:

காலை 3-00 மணிக்கு யாக பூஜை, நவாவரண பூஜை, தேவி மகாத்மிக பாராயணம், நவக்கிரக ஹோமம், சண்டிகா ஹோமம், உபசார சமர்ப்பணம், பலிகள், தானங்கள், சிவாச்சாரியர் பூஜை, மகாபூர்ணாகுதி, சுமங்கலி வழிபாடு, சுபாஜினி பூஜை, திருமஞ்சனம் விசேட பூஜை, அம்பாள் திருவுலாவருதல்

மாலை: நவராத்திரி கொலு விசேட பூஜை ஆரம்பம்.

விழா பிரதமகுரு: சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

இங்ஙனம்
தேவஸ்தான குரு
பிரம்மஸ்ரீ சோ. இ. சிவசங்கரசர்மா.

(சி-6836)



## பசுமையான பாசநினைவுகளுடன் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
1921-05-03

உதிர்வு:
1991-10-06

திதி:
1992-09-25



அமரர்
### காசிப்பிள்ளை செல்லத்துரை

ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயர்
மீண்டுதான் வருவீரோ
மீள எம்மை பார்ப்பதற்கு

நீங்கா நினைவுகளுடன் நினைவுகூரும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'யோக பவனம்',
2-ம் குறுக்குத்தெரு,
வவுனியா.

(சி-6830)

### மானிப்பாயிலிருந்த

# எழுபது அகதி குடும்பங்கள் கிளிநொச்சிக்கு இடம்பெயர்வு

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக மானிப்பாய்பகுதியிலுள்ள பாடசாலைகளில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த சுமார் 70 அகதிகள் குடும்பங்கள் தங்கள் சுய விருப்பத்தின் பேரில் கிளிநொச்சிப் பகுதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமையன்று சென்றுள்ளன.

மானிப்பாய் மகளிர்கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை கூளாவடி அமெரிக்க பாடசாலை, புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியவற்றிலுள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மேற்படி குடும்பங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன்கிளிநொச்சிப் பகுதிக்கு சென்றுள்ளன.

இவர்களுக்கான பிரயாண வசதிகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்செய்துகொடுத்துள்ளது.

அகதி முகாம்களில் தாங்கள் தொடர்ந்து வசித்துவந்ததால் தொற்றுநோய்களினலும், உணவுப்பற்றுக்குறையினலும் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், சமைத்துசாப்பிட விறகுகள்கூட இல்லை என்றும் கிளிநொச்சிப்பகுதிக்குச் சென்ருல் அங்குள்ள உறவினர்களுடன் தங்கியிருந்து விவசாய முயற்சிகளில் ஈடுபடக்கூடியதாக இருக்கும்என்றும் மாதகலைச்சேர்ந்த குடும்பம் ஒன்று தெரிவித்தது.

மாதகல் மேற்கைச் சேர்ந்த மற்றொரு குடும்பம் தாங்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து வந்தவர்கள் என்றும் முகாமில் தொடர்ந்தும் தங்கியிருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லையென்றும் தாங்கள் நச்சிக் குடாவுக்குச்சென்று அங்குள்ள உறவினர்களுடன் மீன்பிடித் தொழில் செய்யப்போவதாகவும் தெரிவித்தது. (72)

## சிரமதான மூலம் வீதிதிருத்தம்

(கொழும்புத்துறை)

தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலயத்தினர் இப்பகுதிப் பொதுமக்களுடன் ஒன்றிணைந்து இங்குள்ள பிரதான வீதி, ஒழுங்கைகளை சிரமதானப் பணிமூலம் செப்பனிடப்பட்டு வருகின்றனர். (154)

### சங்கானையிலிருந்த

# 500 குடும்பங்கள் கச்சாயில் தஞ்சம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலும், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிலுமுள்ள இடம்பெயர்ந்தோர் அகதிமுகாம்களிலுள்ள 500 குடும்பங்கள் கச்சாய் அம்மன் கோயிலடியிலுள்ள அகதி முகாமில் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினல குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சகல வசதிகளையும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஏற்படுத்திக்கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (72)

# ஜீப்பில் குண்டுவெடிப்பு 6 பொலிஸ் அதிகாரிகள் பலி

(லக்னோ)

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் தீவிரவாதிகள் வைத்த குண்டொன்று வெடித்ததில் ஒரு துணைப் பொலிஸ் சுப்பிரிண்டென்ற் உட்பட 6 பொலிசார் பலியாகினர்.

இவர்கள் சென்று கொண்டிருந்த ஜீப் வண்டி பாக்பூர் பொலிஸ் நிலையத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஆற்றின் மீது சென்றுகொண்டிருந்தவேளை "றிமோற் கொன்றோல்" கருவி மூலம் தீவிரவாதிகள் இந்த ஜீப்பை தகர்த்து விட்டனர்.

இதில் பயணம் செய்த பொலிஸ் அதிகாரிகளே ஸ்தலத்தில் பலியாயினர். (கே)

# 'பைலட்' இன்றி புதிய விமானம்

(புதுடில்லி)

விமான ஓட்டியின்றிச் செலுத்தக்கூடியதான விமானமொன்றை இந்தியா தயாரித்துப் பரிசோதித்து வெற்றி கண்டுள்ளது

எவுகணைகளைச் செலுத்தக் கூடிய இந்த விமானம் பாதுகாப்புத் துறைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

"லக்ஷியா" எனப் பெயரிடப்பட்ட இந்த விமானத்தை வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (கே)

# வேடதாரிகள் நடமாட்டம் கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

தெஹிவளைச் சந்திக்கருகில் போலி வேடதாரிகள் இருவர் கடந்த திங்கள் இரவு அடையாள அட்டைகளைக் காண்பிக்குமாறு கூறிப் பொதுமக்களை பரிசோதனை செய்தனர்.

பாதுகாப்புப் பரிசோதனை நடத்துவதற்கு தங்களைப் பணிக்கப்பட்டுள்ளதாக அங்கு அவர்கள் கூறினர்கள்.

மோசடிப் பேர்வழிகளான இவர்கள் ராணுவத்திலிருந்து விலகிச்சென்றவர்களாக இருக்கலாமென கூட்டுப்படைத் தலைமையகம் விடுத்த செய்தியில் தெரிவித்ததோடு பொது மக்களை விழிப்பாக இருக்குமாறும், இப்படியான நிகழ்வுகள் நடந்தால் உடன் தகவல் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (கே)

# வடமராட்சியில் மாணவர் சிரமதானம்

(புலோலி)

தியாகிதிலீபன் நினைவாக பருத்தித்துறை மருதங்கேணி பிரதானவீதி பாடசாலை மாணவர்களால் பகுதி பகுதியாக தினந்தோறும் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

இது இவ்விதமிருக்க வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் வாழும் அகதிமுகாம்களிலும் திலீபனின் நினைவாக தினந்தோறும் உண்ணாவிரதமும் அஞ்சலிக்கூட்டமும் நடைபெற்று வருகின்றன

இதுவரையில் உடுத்துறை செம்பியன்பற்று. ஆகிய இடங்களிலுள்ள முகாம்களில் உண்ணாவிரதமும் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றன. இக்கூட்டங்களில் கடற்புலிகளின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் திரு. பாண்டியன் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. மறவன் ஆகியோர் உரையாற்றினர். (61)

## ஆசிரியர், மாணவர் பங்குபற்றினர்

(திருநெல்வேலி)

யாழ். பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் நல்லூரில் நடைபெற்ற ஒருநாள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். (157)

### தெ. ப சங்க

## ஊழியர்கள் சிரமதானம்

(நெல்லியடி)

தியாகி திலீபனின் 5-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி கடந்த 23-ம் திகதி திக்கம் வடிசாலையில் சிரமதானம் நடைபெற்றது.

திக்கம் வடிசாலை பணியாளர்கள். கட்டைவேலி தென்னை பனம் பொருள் சங்கம், வடமராட்சி தெங்குபனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிப்பணியாளர்களும் இச்சிரமதானத்தில் பங்குபற்றினர்கள். (160)

### தியாகி திலீபனின் நினைவாக

# இறுதிநாள் நோன்பில் கலந்துகொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவாக நாளை 26ம்திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கும் இறுதி நாள் நோன்பில் சமாச அங்கத்துவ சங்கங்களினதும். கொத்தணி ஊழியர்களினதும் அங்கத்தவர்கள், பணியாளர்கள் மகளிர் குழு உறுப்பினர்கள் அனைவரும் முழுமையாக இணைந்து நோன்பு அனுஷ்டிக்குமாறும், அன்றையதினம் அலுவலக செயற்பாட்டை நிறுத்தியும், மதுச்சாலைகளல் விற்பனையை நிறுத்தி வைக்குமாறும் வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுமுகாமையாளர் திரு. கி. சிவனேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்மராட்சி சங்கங்கள், 190ம் கட்டை, நுணுவிலிலும், வடமராட்சி சங்கங்கள் மாலிசந்தி விநாயகர் ஆலயத்திலும் வலிகாமம். தீவகம் சங்கங்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் நடைபெறும் உண்ணாவிரதத்தில்கலந்துகொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளனர். (அ)

# காலபோக பயிர்ச்செய்கை திட்டமிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னர், முல்லைத்தீவு வவுனியா ஆகிய மாவட்டங்களை அடக்கிய வடதமிழீழத்தை உள்ளடக்கியதான 92/93 காலபோகப் பயிர்ச்செய்கைத்திட்டமிடல் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாயப் பகுதியினர் தயாரித்து வருகின்றனர்.

இவ்வருட காலபோக பயிர்செய்கையானது எதிர்காலச் சந்தை வாய்ப்பு மற்றும் வடதமிழீழ உணவுத் தேவை என்பவற்கு ஏற்பத் திட்டமிடப்படுவதோடு தேவையான உள்ளீடுகள் உரிய காலத்தில் கிடைப்பதை உறுதி செய்து கொள்வதும் அவசியமானதாலேயே இவ்வருடத் திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினை விவசாயத்துறை சார்ந்த அறிஞர்கள், நிர்வாகிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள், விவசாயிகள், ஆகியோரை இணைத்து இம்மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியல் நடாத்தவுள்ளதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பரப்பில் இருந்து நேற்று முன்தினம் கடற்படையினரால் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (36)

# "ஈழத்தை இன்று நோக்கும்போது மாணவர்களிடையே வணிககல்வி ஆர்வம்; தன்னிறைவு பொருளாதாரத்துக்கு வழிவகுக்கும்"

### நூல் வெளியீட்டு விழாவில் சிவராசா

(யாழ்ப்பாணம்)

"அமெரிக்கா. யப்பான் போன்ற வளர்முக நாடுகளில் நாற்பத்திரெண்டு சதவீதமான மாணவர்கள் வணிக கல்வியில் ஆர்வம்கொண்டு பாண்டித்தியம் பெற்றுவருகின்றனர் இது அவர்களுக்கு சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பாகவுள்ளது. ஈழத்தை இன்று நோக்கும் போது மாணவர்களில் அதிகமானேர் வணிககல்வியில்நாட்டம்கொண்டு பட்டங்களைப் பெறும்நிலைக்கு வந்துள்ளனர். இதனல் எமது மண்ணில் எதிர்காலத்தில்சுயதொழில்முயற்சிகள் பெருமளவில் உருவாக வாய்ப்புகள் தோன்றியுள்ளது. அதன்மூலம் நாம் தன்னிறைவு பெற்ற பொருளாதார இலக்கை அடைய முடியும்."

இவ்வாறு யாழ்ப்பாணதிருக்குடும்ப கன்னியர்மட ஆங்கில பாடசாலை வர்த்தக மாணவர் மன்றத்தின் 'வணிகத்தளிர்' சஞ்சிகைவெளியீட்டுவிழாவில் யாழ்ப்பாணப் பிரதேச வர்த்தகக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கி. சிவராசா தெரிவித்தார்.

இவ்விழாவிற்கு மன்றத்தலைவர் செல்வி பா. அனுதா தலைமை தாங்கினர்.

கல்லூரி அதிபர் அருள் செல்வி யோலண்ட் உரையாற்றுகையில், நாளை மலரப் போகும் சமுதாயத்தில் நாம் தலைநிமிர்ந்து நிற்க கல்வியொன்று மட்டும்தான் உறுதுணையாக இருக்கும் என்ருர்.

விழாவில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விரிவுரையாளர் கே. கே. அருள்வேல், ஆசிரிய ஆலோசகர் வ.க பாலசுப்பிரமணியம், ஆசிரியை திருமதி லெ பரராஜசிங்கம், செல்வி ம. வீணு, மத்தியகல்லூரி அதிபர் நா.க சண்முகநாதபிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். (எஸ்)

## மாணவர் அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பாடசாலை மாணவர்களின் சுமார் 50 தபால் அடையாளஅட்டைகள் சுளிபுரத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் காரைநகர் தபாலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டுவருகிறது.

காரைநகரில் தேங்கிக்கிடந்த இந்த அடையாள அட்டைகள் தபாலதிபர் திரு. ஏ. துரையப்பாவின் துரித முயற்சியினல் சுளிபுரம் வந்து சேர்ந்து தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (சி)

## தியாகி திலீபன்

இங்கு ஒரு ஒளிவீச
எரிந்தும எரியாதவன் நீ
எங்கள் தமிழ்த் தேசம்
எனும் கருவில் நிலைத்தவன் நீ
சங்கம் வளர்த்த தமிழ்
சாகாது கோலோச்ச
அங்கு அவர் கண்ட
அகிம்சைப் போர் வென்றவன் நீ.

நீரின்றி உணவின்றி
நெஞ்சமதில் உறுதியுடன்
ஓர்மான உணர்வென்ற
உணவுண்டு தமிழ் ஈழ
வேரோடி நிமிர்ந்த மரம்
வீழாது தளைத்தோங்க
நீராக உணவாக
நினைத்தந்த தியாகி நீ!

\- நெடுந்தீவு லக்ஸ்மன்.

# முக்கிய தஸ்தாவேஜுகளை மீட்க ஹமில்டன் அனுமதி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் முக்கிய தஸ்தாவேஜுகளை வீடுகளில் விட்டு வெளியேறிய அரசாங்க அதிகாரிகளை அங்கு கூட்டிச் சென்று அவற்றை எடுப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படி கூட்டுப் படைத் தலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அதிகாரிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

யாழ். அரசாங்க அதிபர் சமர்ப்பிக்கும் பெயர்ப்பட்டியல் அடங்கிய உத்தியோகத்தர்களை இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு பகுதிகளுக்கு அழைத்துச் சென்று அவர்களின் வீடுகளில் உள்ள முக்கிய தஸ்தாவேஜுகளை எடுப்பதற்கு பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு ஆவன செய்யும்படியும் ஹமில்டன் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (வி)

# ★ குற்றவாளிகளைப் பரிமாறுவதற்கு இலங்கையும் இந்தியாவும் ஒப்பந்தம் செய்யவேண்டும்

## — சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்

(புதுடில்லி)

குற்றவாளிகளை விசாரணைக்காக சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க வகைசெய்யும் ஒப்பந்தமொன்றில் இலங்கையும் இந்தியாவும் கைவெழுத்திட வேண்டுமென்று ஜனதா கட்சி தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

இதற்கான முயற்சிகளை இந்தியா வரவுள்ள இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவுடன் இந்தியா பேசக்கூடும் எனவும் சுப்பிரமணியம் சுவாமி புது டில்லியில் தெரிவித்தார்.

இதேவேளை சார்க் நாடுகளிடையே இத்தகைய ஒரு ஒப்பந்தத்தை செய்துகொள்ளுவதற்கான வரைவுகள் செய்துகொள்ளப்பட்டு வருவதாகவும் பங்களாதேசில் நடைபெறும் அடுத்த உச்சி மாநாட்டில் இது எடுத்துக்கொள்ளப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்தியாவும் இங்கிலாந்தும் இப்படியான ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (கே-சி)

# இலங்கையின் சீரழிவிற்கு அரசே பொறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து அரசியல் பொருளாதார சீரழிவுக்கு அரசு முக்கிய காரணம் என்று 12 கத்தோலிக்க நிறுவனங்கள் கொழும்பில் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் 5-ந் திகதி மதகுருமாரால் தயாரிக்கப்பட்டப்பட்ட அறிக்கை இந்த வாரம் வெளியிடப்பட்டது.

அரசின் இந்தப் போக்கினால் மக்கள் தினம் தினம் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள், விலைவாசி உயர்ந்துள் என்றும்—

அரசியல்வாதிகளின் செயல்களினால் இலங்கைக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும்—

வடபகுதிக்குச் சென்று வந்த மதகுருமார் அரசின் போக்கைகண்டித்துள்ளார்கள் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாவிற்கும் செல்லவுள்ளார்.

இந்தியாவில் பிரதமர் பி.வி நரசிம்மராவைச் சந்தித்து ஜனாதிபதி பிரேமதாசா உரையாடவுள்ளார்.

இச்சந்திப்பின்போது இலங்கை இனப்பிரச்னை தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தைகளை அவர் பிரதமர் நரசிம்மராவுடன நிகழ்த்தவுள்ளார்.

மாலிலிருந்து பாகிஸ்தான் சென்ற ஜனாதிபதி அங்கிருந்து நேபாளம் நோக்கிச் சென்றுள்ளார்.

### மாகாணசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளே பெருமளவில் பலவீனமாக்காதவரை இப்பகுதியில் தேர்தல் நடத்துவது என்பது சாத்தியமே இல்லாத ஒரு விடயமெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (சி)

### நிரந்தர

(4-ம் பக்கம் பார்க்க)

உரையாற்றுகையில் அவர் இதனைத்தெரிவித்தார்.

இனப்பிரச்னைக்கான தீர்வை ஜனாதிபதி பிரேமதாஸா ஒருவா மூலமே தீர்த்து வைக்க முடியும் என்றும் இதற்கு சகல கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கூறினார். (சி)

### ஜாமீனில்

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளார்.

இவர்கள் ஒவ்வொருவரும் சென்னை பெருநகர மஜிஸ்ரேட் முன் ஆயிரம் ரூபாவுக்கான உறுதிமொழி பத்திரங்களை அளிப்பதின் மூலம் இவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்று நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். [சு]

### இலங்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னை என்பதால் ஐ.நா. வோ அல்லது வேறு எந்த அமைப்புமோ இதில் தலையீடு செய்யுமென்று நான் எண்ணவில்லை அதை நாம் எதிர்பார்க்கவும் இல்லை.

வெறுமனே பத்திரிகைகளில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு நாம் எதுவித நடவடிக்கையும் எடுக்க இயலாது என்றார். கே.சி)

## தென் அமெரிக்க டாக்டர் வருகிறார்

(நெல்லியடி)

பருத்தித்துறை வைத்தியசாலையில் பிரான்ஸ் வைத்திய குழுவின் சத்திரசிகிச்சை நிபுணர், தமது சொந்த நாட்டுக்குத் திரும்பியதையடுத்து இவரது இடத்திற்கு புதிய சத்திரசிகிச்சை நிபுணராக தென் அமெரிக்காவிலிருந்து டாக்டர் ஒருவர் வரவிருக்கிறார்.

அடுத்த மாத முற்பகுதியில் பருத்தித்துறைக்கு வரவிருக்கும 'கோமாரா' கப்பலில் வந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகின்றது. [160]

### பாட்டாளி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் கட்சி எதிராக இவ்வாறான நடவடிக்கையைத் தான நாடியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகள் ஆதரவு நடவடிக்கைக்காக பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் கைது செய்யப்பட்டதையடுத்து இக்கட்சித் தொண்டர்கள் வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

அராஜகத்தை ஒருசெயலாகவும், தேசவிரோதத்தை ஒரு கொள்கையாகவும் கொண்ட பாட்டாளி மக்கள் கட்சியை மத்திய அரசு உடனடியாகத் தடைசெய்ய வேண்டுமென்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா குறுக்கிட்டு, முதலமைச்சரின் இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவதாகக் கூறினர். (இ)

### தமிழகத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆற்காடு மாவட்டம் தாலுகா நல்லூர் ரயில்நிலைய அதிபர் கும்பல் ஒன்றின் அரிவாள் வெட்டுக்கு இலக்காகி கை ஒன்றை இழந்துள்ளார்.

இந்த ரயில் நிலையம் வழியாகச்செல்லும் பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்துமாறு 20 பேர அடங்கிய கும்பலொன்று இவரை வற்புறுத்தியதாகவும் ரயில் அதிபா மறுத்தபோதே அவர் வாள் வெட்டுக்கு இலக்கானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

நேற்று தஞ்சை மாவட்டம் திருநெல்லடி அருகே சோழன் போக்குவரத்து பேருந்து ஒன்று எரிக்கப்பட்டது. புதுப்பட்டியில் லொறி ஒன்று தீவைக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் சில நூர்என்ற இடத்தில் தனியார் பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. தென்னாற்காடு மாவட்டத்தில் திருநெல்வேலியிலும் சேட்டியாகோட்டையிலும் பல பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டன.

நேற்று திண்டிவனத்துக்கு அருகே தண்டவாளத்தில் பாறாங்கற்கள் வைக்கப்பட்டது. பல பகுதிகளிலும் பஸ்கள் கல்வீச்சுக்கு இலக்காகின. (சு-சி)

### பொலிஸ்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ய்வுப் பணியகம் பணிப்பாளர் கொட்ப்றி குணசேகர தலைமையில் நியமித்துள்ளது.

பொலிஸ் அதிகாரி அன்ரனி தியோபிலஸ் நேற்று முன்தினம் மாலை கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள யூனியன் பிளேஸில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இனந்தெரியாத இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைக்கு விடுதலைப்புலிகள் காரணமாக இருக்கலாமென்று குற்றப் புலனாய்வுப் பணியகம் சந்தேகிக்கின்றது என்று திரு. கொட்ப்றி குணசேகர லங்காபுவத்துக்கு தெரிவித்துள்ளார்.

கொலையாளிகளைக் கண்டுபிடிக்கும் விதமாக கொழும்பு நகருக்கு வெளியே செல்லும் பாதைகளில் எல்லாம் பொலிசார் சோதனை நிலையங்களை அமைத்துள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

இத்தவேளை திரு தியோபிலஸை கொலைசெய்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை பொலிசார் கைது செய்யமுற்பட்டபோது அவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்

நேற்றுக் காலை பதுங்கியிருந்து பொலிசார் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த குலசிங்கம் ஜெயச்சந்திரன் என்பவரை கைதுசெய்ய முற்பட்டபோது அவர் சயனைட் அருந்தி உயிரிழந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர். (இ-கி)

# கட்டைகாடு முகாமிலிருந்து ஷெல், பீரங்கி தாக்குதல்

(பளை)

கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன் தினம் மாலை தொடக்கம் நேற்றுவரை தொடர்ச்சியான ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் கரையோரப்பகுதிகளை நோக்கி நடத்தப்பட்டது

இதனால் கரையோர மக்கள் அச்சம் அடைந்து தமது கடற்றொழிலை மிகவும் மந்தகதியில் செய்ததைகாணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை கடற்படையின் படகுகள் அடிக்கடி ரோந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது (156)

# அக்காச்சி குடியிருப்பு முதலாண்டுநிறைவு

(யாழ்ப்பாணம்)

திலீபன் நினைவாக திறந்து வைக்கப்பட்ட அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பின் முதலாண்டு நிறைவினை அக்காச்சி எச்முசிக்குடியிருப்பில் வாழும் மக்கள் நாளை திலீபன் நினைவுடன் கொண்டாடவுள்ளனர். நாளை மாலை 7-30 மணிக்கு இந்நினைவுக்காக பொதுக்கூட்டமும் அதன்பின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இக்குடியிருப்பு மிக எழுச்சியாக திலீபன் நினைவு தினத்தில் திறக்கப்பட்டதும் தெரிந்ததே. (சி)

### இலங்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த ஐ.நா. முக்கிய பொறுப்பெடுத்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்மென்றும் கூறியுள்ளார்.

அண்மைக் காலமாக இலங்கையிலும் ஈராக்கிலும் மனித உரிமைகள் மிகமோசமாக மீறப்பட்டுவருவதாகவும் மன்னிப்பு சபை அறிக்கை தெரிவித்துள்ளது. (சி)

### இலங்கைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு கூர்ந்துள்ளது.

இலங்கை இராணுவத்திற்கு இராணுவ தளபாடங்கள் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இவ்வேளையில் தொடர்ந்தும் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

### நாடாளுமன்றில்

( 1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரன சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

ஒதுக்கப்பட்ட நேரத்திலும் அதிக நேரம் பேசிக்கொண்டிருந்த திரு. றிச்சர்ட் பத்திரனவை நிறுத்துமாறுசபா நாயகர் பலமுறை கூறியும் அவர் நிறுத்தத் தவறியதால் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இதையடுத்து சபையில் சில மணிநேரம் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. (சி)

### இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வம் ஜெனரல் சிசில் வைத்தியரத்னவையும் வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி கேர்ணல் தேவிந்த களுபானவையும் சந்தித்து பேசியுள்ளனர்.

இவ்விருவரும் பல குடியேற்றத் திட்டங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டனர். (சி)

### அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கான வாரந்தோறும் நடைபெறும் அறிவியல் கருத்தரங்கு தொடர் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டாது என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது இத் தொடர் அடுத்தவாரம் நடைபெறும்.

### எழுச்சி நாளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்யப்பட்டு வருகின்றன.

எழுச்சி நாளன்று தமிழீழம் எங்கும் பொதுவிடுமுறை தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் எழுச்சிநாளை பொட்டி உண்ணாவிரதம் மற்றும் பொதுப்பணிகளும் நினைவஞ்சலிக்கூட்டங்களும் நடாத்தப்படவுள்ளன.

அன்றைய தினம் ஊரெழுவிலுள்ள திலீபன் நினைவாலயத்திலிருந்து நல்லூர் வீதி வரை தூக்கு காவடி ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த எழுச்சிநாளைசிறப்பிக்கும் வகையில் யாழ்.குடா முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### தியாகி திலீபன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் உண்ணா நோன்பினை ஆரம்பித்துள்ளார்.

இவர் தொடர்ச்சியாக மூன்றுநாட்கள் இவ்உண்ணா நோன்பினை அனுஷ்டிக்கவுள்ளார். நாளை 26ம் திகதி இவரது உண்ணாநோன்பு முடித்து வைக்கப்படும்.

இதேவேளை திலீபன் நினைவாக ஆனைக்கோட்டை மூள்ளிக் கிராமத்தில் புதியவீதி ஒன்று அக்கிராம மக்களினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாருக்காக யாழ்ப்பாணம் இலக்கம் ... வீதி ... இல் அச்சிடப்பட்டு 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம் திகதி வெளியிடப்பெற்றது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/18380;